நாள் - <u>06.08.2022</u>

**C.C. No**.106/2019

ம.சா. 1- ஸ்ரீநிவாசம், த/பெ. அய்யாசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 6**th day of August** 2022.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான், வி. சின்னசாமி, கே. சின்னசாமி ஆகீயோர் சேர்ந்தது நிலங்களை வாங்கி விற்கும் வேலை பார்க்கிறோம் என்றால் சரியல்ல. என்னிடம் சுதா என்பவர் எவ்வளவு கடன்பெற்றுள்ளார் என்றால் யாரை கூறிகிறீர்கள் என்று தெரியாது.

2. வி. சின்னசாமி, கே. சின்னசாமி மற்றும் எதிரி ஆகீயோர் சேர்ந்து ஒரு உறுதிமொழி ஏற்படுத்தி கொண்டோம் என்றால் எனக்கு தெரியாது. நான் சுதாவினுடைய வீட்டில் புகுந்து அவரை தாக்கி விட்டு ஆவணங்களை எடுத்துசெல்லவில்லை என்றால் அவ்வாறு ஒரு வழக்கே ஏற்படவில்லை.

3. பொள்ளாச்சியில் சுதாவிற்கு எதிராக வழக்கு எதுவும் இல்லை என்றால் அது எனக்கு தெரிாயாது. சுதா என்பவர் எனக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளார் என்றால் இதுவரை எனக்கு எவ்வித அறிவிப்பும் வரவில்லை.

4. எதிரி குண்டலப்பட்டி, லட்சுமிமாபுரம், பொள்ளச்சியை சேர்ந்தவர் ஆவார். எதிரிக்கு வட்டிக்காக கொடுத்து பணத்தை அவர் திருப்பி கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வட்டிக்காக கொடுக்கவில்லை. நட்பிற்காக கொடுத்தேன். எத்தனை முறை எதிரியை பார்த்துள்ளேன் என்றால் நிறைய முறை பார்த்துள்ளேன். 30 தடவை பார்த்துள்ளேன்.

5. 05.09.2018 ம் தேதி எதிரிக்கு பணம் கொடுத்தேன். என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் எதிரியை பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் சுதாவிற்கும் தான் வரவு செலவு இருதநது என்றால் அது எனக்கு தெரியாது. சுதாவின் வீட்டிலிருந்து நான் ஆவணங்களை எடுத்து சென்றபோது எதிரியுனுடைய 20 காசோலைகள் மற்றும் 10 பச்சை தாள்களையும் எடுத்து சென்றேன் என்றால் சரியல்ல.

6. எதிரி என்னிடமிருந்து 3 ,50,000 /- கடன் பெற்றுள்ளார். எதிரி என்னிடமிருந்து 5 லட்சம் கடன்பெற்றதாக கூறுகிறார் என்றால் 3 ,50,000 /- தான் கடனாக பெற்றுள்ளார். சுதா எனக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக எதிரிக்கு எதிராக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்து பணம் பறிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வி. சின்னசாமி, கே. சின்னசாமி ஆகியோர் ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தத்தின்படி

பணத்தை கொடுத்த பின்னர் ஆவணங்களை எதிரியிடம் ஒப்படைப்பதாக கூறினேனா என்றால் அவ்வொப்பத்தத்தில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. வி. சின்னசாமி, கே. சின்னசாமி, சுதா மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து கொண்டு எதிரியிடம் பணம் பறிக்க வேண்டும் என்று கூட்டு சதி செய்கிறோம் என்றால் சரியல்ல.

8. வி. சின்னசாமி, கே. சின்னசாமி மற்றும் சுதா ஆகீயோரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் அதை நீங்கள் பார்த்து கொள்ளுங்கள். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:.</u> இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2022.08.06 16:13:01 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**